தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1975 மார்ச் 15.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Teachers training for Graduates in Economics

*** 326. Q.** Thiru **N. DENNIS**: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) Whether it is a fact that Economics Graduates are not admitted into the B.T. Training Colleges in the State and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) தற்போது உயர்நிலைப்பள்ளிகளில் மாணவர்களுக்குப் பொருளாதாரப் பாடம் சிறப்புப் பாடமாகக் கற்றுத் தரப்படுவதில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, பி. யு. சி. இல் பல மாணவர்கள் "ஹிஸ்டரி" யை இஷ்ட பாடமாக எடுத்துப் படிக்கிறார்கள். பி. ஏ. யில் ஸப்ஸிடியரி பாடம் "ஹிஸ்டரி"யாக இருக்கிறது. பி. டி.யிலும் அவர்கள் "ஹிஸ்டரியை" இஷ்ட பாடமாக எடுத்துப் படிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. பொருளாதாரம் எடுத்து பி.ஏ தேறிய பட்டதாரிகள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். "ப்ரொஃபஷனல் கோர்ஸ்"—இல் அவர்களுக்கு அட்மிஷன் கிடைக்காத காரணத்தால் அவர்கள் பி.ஏ. எடுத்துப் படித்திருக்கிறார்கள். கேரளா பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பொருளாதார பட்டதாரிகளுக்கு பி. டி. யில் இடம் கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதேபோல் தமிழகத்திலும் பி. ஏ. பொருளாதார பட்டதாரிகளுக்கு பி. டி. இல் அட்மிஷன் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்குப் பொருளாதாரப் பாடம் சிறப்புப் பாடமாகக் கற்றுத்தரப்படாததன் காரணமாக, அதை எடுத்துப் படித்து பி. ஏ. பட்டம் பெற்றவர்களை பி. டி.யில் சேர்த்துக் கொள்வதால் எந்தப் பலனும் ஏற்படுவதில்லை. ஆசிரியர் வேலைக்கு வரவேண்டிய எண்ணம் உள்ளவர்கள் வரலாற்றை முக்கியப் பாடமாக எடுத்து, பிறகு பி. டி.

படிக்கலாம். பாலிடிக்ஸ், சோஷாலஜி, ஜியாலஜி, எக்கனமிக்ஸ் பாடங்கள் உயர்நிலைப் பள்ளிகளில் இல்லை. பி. ஏ. படித்தவர்கள் ஆசிரியர் வேலைக்குத்தான் வரவேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், அதற் காக அந்தப் பாடங்களை உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்த முடியாது. மாதமாடிக்ஸ், ஃபிசிக்ஸ், கெமிஸ்டரி, நாச்சுரல் ஸயன்ஸ்; ஜியாக்ரஃபி, அட்வான்ஸ்டு தமிழ், அட்வான்ஸ்டு இங்கிலிஷ், ஹிஸ்டரி, எடுத்துப் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு பி. டி. இல் இடம் அளிக்கும்போது, அவர்கள் உயர்நிலைப்பள்ளிகளில் அத்தகைய பாடங்களைச் சொல்லிக் கொடுக்க முடியும். வரலாற்றைத் துணைப் பாடமாக எடுத்துக் கொண்டிருப்பவர்கள் வரலாற்றுப் பாடங்களைச் சிறப்பாகப் போதிப்பார்கள் என்று கருதுவதற் கில்லை. ஆகவேதான் சென்னைப் பல்கலைக்கழகம் அதை ஏற்றுக் கொள்ள வில்லை. தமிழக அரசும் அதன்படி நடக்க வேண்டிய அவசியம் ஏற் படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: உலகம் பூராவும் "பொலிடிகல் எக்கானமி" என்பது ஒரு முக்கியமான ஸப்ஜெக்டாக வந்திருக்கிறது. "எக்கானமிக் தியரி" பற்றியும் பலவிதமாகப் பேசப்படுகிறது. ஆரம்பப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் இதைச் சொல்லிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா? பொலிடிகல் எக்கானமி, எக்கானமிக்ஸ் படித்துத் தேறிய பி. ஏ. பட்டதாரிகளுக்கு பி. டி. யில் இடம் கொடுப்பது பற்றி அரசு மறுபரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பொருளாதாரம் ஒரு பாடமாக உயர்நிலைப்பள்ளியில் கையாளப்படு வதில்லை. அதைப்பற்றிப் பல்கலைக் கழகம் முடிவு எடுத்து அந்தப் பாடத்தையும் பள்ளிக்கூடங்களில் புகுத்த வேண்டிய நிலைமையை வேண்டு மானால் ஏற்படுத்தலாம். அதை விருப்பப் பாடமாக வைத்து, மாணவர் களும் படிக்க முன்வந்தால் அதைப்பற்றி அவர்கள் ஆராயலாம். ஆனால், இப்பொழுது இருக்கிற நிலையில் அதற்கு இடம் இல்லை.

ஆசிரியர் பயிற்சிக் காலத்தில் உதவித் தொகை.

* 327. வினா—திரு. ஆலடி அருணா: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின் தங்கிய வகுப்பைச் சார்ந்த ஏ.ழ மாணவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி காலத்தில் உதவித் தொகை அளிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.